**O.S.No.44/2013**

**Date:03.01.2019**

**பிரதிவாதி தரப்பு சாட்சி 3 - கோபால், த-பெ. சங்கரப்பநாயக்கர்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

(2 மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சத்யசீலன் புரோமோட்டர்ஸ் என்ற கம்பெனியில் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கணக்குப்பிள்ளையாக பணி புரிந்து வருகிறேன். அந்த கம்பெனி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் நான் 15 வருடமாக வேலை பார்த்து வருகிறேன் அதற்கு முன்பு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்ற விபரம் தெரியாது. என்னுடைய அடையாள அட்டை எதுவும் மேற்படி கம்பெனியில் பணிபுரிவதற்கு இருக்கிறதா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி சத்யசீலன் 5ம் பிரதிவாதி என்னவாக இருக்கிறார் என்றால் அவரும் ஒரு இயக்குநராக உள்ளார். மற்றும் வேறு யார் இயக்குநராக மேற்படி கம்பெனியில் இருக்கிறார் என்றால் அவருடைய தம்பி சுதந்திரசீலன் இயக்குநராக உள்ளார். வேறு யாரும் இயக்குநராக உள்ளனரா என்றால் எனக்கு தெரிந்தவரை இவர்கள் இருவர் மட்டும் தான் உள்ளனர். ஜெயசீலன் பெயரில் வேறு யாரும் இருக்கிறார்களா என்றால் தெரியாது. கம்பெனி எங்கு உள்ளது என்றால் சென்னையில் உள்ளது. இநத நிறுவனம் பங்குதாரர்களைக் கொண்டதா அல்லது வேறு வகையில் அமைக்கப்பட்ட நிறுவனமா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. சத்தியபிரமாண வாக்குமூலம் நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் சரிதான். கம்பெனியின் அக்கவுண்டண்ட் என்று என்னுடைய முத்திரையோ அல்லது கம்பெனியின் முத்திரை வைத்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 என்னுடைய கையெழுத்து உறுதிசெய்யும் வகையில் இல்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.10 09.07.2018ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.10ல் சத்தியசலனைத் தவிர வேறு யாரும் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். சத்தியசீலன் எவ்வாறு கையொப்பம் இடுவார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் உள்ள சத்தியசீலன் கையெழுத்து மற்றும் பி.வா.சா.ஆ.10 ல் உள்ள கையெழுத்து இதில் எது அவருடைய கையெழுத்து என்றால் இரண்டுமே அவருடைய கையெழுத்து தான். சத்தியசீலன் தமிழ்நாடு முழுவதும் நிலங்கள் வாங்கி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் காதக்கிணறு பகுதியில் மட்டும் ரியல் எஸ்டேட் செய்து வருகிறார். வேறு எங்கு சொத்து வாங்கி ரியல் எஸ்டேட் செய்து வருகிறார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. தாவாச் சொத்து எந்த தாலுகாவில் உள்ளது என்றால் தற்போது மதுரை கிழக்கு வட்டத்தில் உள்ளது. தாவாச் சொத்து வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யாரிடமிருந்து தாவாச் சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் செல்வம் என்பவரிடமிருந்து 2007ல் சத்தியசீலன் கிரையம் பெற்றுள்ளார். செல்வம் என்பவர் கோவில்பட்டியைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். செல்வத்திற்கும் சத்தியசீலனுக்கும் என்ன சம்பந்தம் என்றால் எந்த உறவுமுறையுமில்லை. எதனடிப்படையில்

செல்வத்திடமிருந்து சத்தியசீலன் கிரையம் வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் அவர் விற்கமுற்பட்டார் இவர் வாங்கினார். செல்வத்தின் அப்பா பெயர் கடற்கரை. செல்வத்தின் அண்ணன் பெயர் சந்திரசேகர். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் வாதி 30 செண்டுகளை மட்டும் சந்திரசேகருக்கு பவர் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். புல எண் 47/6 ஆகும். அதில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சந்திரசேகரனிடமிருந்து 30 செண்டை யார் கிரையம் பெற்றுள்ளார் என்ற விபரத்தை நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. தாவா வழக்கில் செல்வம், பாண்டியம்மாள்,. ராஜ ுநாயுடு இவர்கள் தரப்பினராக இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். பாண்டியம்மாளுக்காக நீதிமன்றத்தில் யார் சாட்சி சொன்னார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் அவரது கணவர் சாட்சியம் அளித்தார். தாவாச் சொத்தைப் பொறுத்து செல்வத்திற்கு உண்மையான உரிமைமூலம் உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் அவரை எங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தோமா என்றால் குறுக்கு விசாரணை செய்தோம். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்ட விபரம் எதுவும் எனக்கு தெரியாது வழக்கிற்காக தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள காதக்கிணறு கிராமத்தில் தாவாச சொத்தை சேர்த்து மொத்தம் எத்தனை சொத்துக்கள் வாங்கினோம் என்றால் மொத்தம் 48 ஏக்கர் வாங்கினோம். பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் காண்பித்துள்ள 10 சொத்துக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக பத்திரம் உள்ளதா என்றால் தனித்தனியாகவும் உள்ளது சேர்ந்தும் உள்ளது. இதில் தாவாச் சொத்து உள்ளதா என்றால் உள்ளது. 47/4 ல் 18 ஏர்ஸ் ஆகும். தாவாச் சொதது செல்வம் யாரிடமிருந்து எப்படி வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் பாண்டியம்மாளிடமிருந்து வாங்கினார். பாண்டியம்மாளுக்கு இந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் ராஜு நாயக்கரிடமிருந்து வாங்கினார். ராஜ ுநாயக்கர் தாவா வழக்கில் கட்சி செய்யாமல் தோன்றாத்தரப்பினர் ஆகியுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ராஜு நாயக்கர் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சுந்தரநாயக்கரிடமிருந்து வாங்கினார் என்னிடம் காட்டப்பட்ட பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1-ல் புல எண், விஸ்தீரணம் எவ்வளவு சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். 48 செண்டு சர்வே எண் 47/4 ஆகும். பி.வா.சா.ஆ.2ல் புல எண், விஸ்தீரணம் எவ்வளவு சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் சர்வே எண் 47/4ல் 48 செண்டு ஆகும். பி.வா.சா.ஆ.3ல் புல எண், விஸ்தீரணம் எவ்வளவு சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் யூடிஆர் படி நஞ்சை என்று உள்ளது அதில் 47/4ல் 48 செண்டு ஆகும். பட்டா எண் 4353 என்று கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. ராஜுநாயுடுவிடமிருந்து பாண்டியம்மாள் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பட்டா எண். 20 ஆகும். தாவாச் சொத்து நஞ்சை நிலம் என்றால் சரிதான். ராஜுநாயுடு, பாண்டியம்மாள் பெயரில் உள்ள கிஸ்தி ரசீது அல்லது அடங்கல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. கிஸ்தி ரசீது மற்றும் அடங்கல் சம்மந்தமாக வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் சுதந்திரசீலன் மற்றும் சத்தியசீலன் பெயரில் உள்ளது. மேற்படி ஆவணங்களில் தாவாச் சொத்து 47/4ல் 48 செண்டுக்குரிய கிஸ்தி ரசீது எது என்றால் பி.வா.சா.ஆ.6 ஆவணம் ஆகும் பி.வா.சா.ஆ.7 தாவாச் சொத்திற்கு சம்பந்தமில்லை என்றால் சரிதான். சத்தியசீலன் எங்குக் குடியிருக்கிறார் என்றால்

சென்னையில்தான் குடியிருக்கிறார். அவருக்கு மதுரையில் சொத்து வாங்கி கொடுப்பது நானும் சந்திரசேகர் மற்றும் செல்வம் என்றால் சரிதான். சண்முகம்பிள்ளை மகன் மனோகரன் சேர்ந்துதான் கிரையம் வாங்கி கொடுத்தோம் என்றால் சரிதான். தாவாச் சொத்து வாங்குவதற்கு முன்பாக வருவாய்த் துறை ஆவணங்களை சரிபார்த்து தான் வாங்கினோம் என்றால் சரிதான். தாவாச் சொத்து தகிரையம் வாங்கியதற்கு முன் தாவா சொத்து வாதயின் தந்தை பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. புல எண் 47/6ல் 30 செண்டு கிரையம் பெற்று அதனடிப்படையில் 47/4ல் மோசடி செய்து தவறான ஆவணங்கள் உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் இதுவரைக்கும் வாதிதான் அனுபவத்தில் இருந்து கிஸ்தி வரி ரசீது செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 மற்றும் 7 தவிர வேறு எந்த கிஸ்தி ரசீதும் இல்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து கிரையம் வாங்கியபின் வேறு அபிவிருத்தி எதுவும் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. தாவா இடத்தில் பிளாட்டுகள் எதுவும் இல்லை என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.8 மூலம் சத்தியசீலன் இந்து கூட்டுக்குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அவ்வாறு வாங்கும் போத கூட்டக் குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் வரவு செலவு கணக்குகளை வைத்திருந்தாரா என்றால் இல்லை. இடைநிலை மனு1775/2018 நீதிமன்றத்தில ஆவணங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய முதலாளி தாக்கல் செய்துள்ளார். முறையான அங்கீகாரம் இல்லாமல் நான் சாட்சி சொல்வதால் என்னுடைய சாட்சி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவாச் சொத்து கிரையம் பெற்ற பிறகு மேற்படி சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எதிரிடை கோரிக்கை எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. வருவாய் துறை ஆவணங்கள் வாதி மற்றும் வாதியின் தந்தை பெயரில் உள்ள நிலையில் அதை ரத்து செய்வதற்கு வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய்த்துறையில் மேல்முறையீடு செய்தோமா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் தாவாச் சொத்தை அபகரிப்பதற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சத்தியசீலன், சுதந்திரசீலன் பெயரில் வேறு எந்த மாவட்டத்திலாவது நில அபகரிப்பு வழக்கு எதுவும் நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. தாவாச் சொத்து கிரையம் பெறுவதற்கு முன்பு பி.வா.சா.ஆ.9 எழுதுவதற்கும் முன்பும் வாதியின் தகப்பனார் பெயரில் தாவாச் சொத்து இருக்கின்ற விபரம் தெரியும் என்றால் சரியல்ல. எல்லாம் தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.